**அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் கவனத்திற்கு. (அரசு /அரசு உதவி பெறும் பள்ளிகள் / ஆதி திராவிட நலப் பள்ளிகள் / மெட்ரிக் பள்ளிகள் / சி.பி.எஸ்.சி பள்ளிகள்)**

பள்ளி அளவிலான கலா-உத்சவ் போட்டிகள் **9 முதல் 12 வகுப்பு** மாணவ மாணவிகள் பங்கேற்கும் வண்ணம் **21.10.2022க்குள்** முடித்து **28.10.2022** அன்று ஒன்றிய அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கின்ற அளவில் **மாணவ மாணவிகளின் பட்டியலை** உடனடியாக அந்தந்த மையத்திற்கு **(ஒன்றிய அளவில் போட்டிகள் நடைபெறுகின்ற மையத்திற்கு)** அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. ஒன்றிய அளவிலான போட்டிகள் நடைபெறும் இடங்களும் பொறுப்பாளர்களும் அடங்கிய பட்டியல் முன்னரே அனுப்பப்பட்டுள்ளது. 10 விதமான போட்டிகளுக்கும் அந்தந்த மையப் பொறுப்பாளர்களே அருகிலுள்ள பள்ளிகளிலிருந்து **தேவையான ஆசிரியர்களையும், வட்டாரக்கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டார வள மைய பயிற்றுநர்களையும்** நடுவர்களாக நியமித்து போட்டிகளை எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் நடத்திடுமாறு அறிவுறுத்தப்படுகிறது. இதற்கான முன் ஆயத்தப் பணிகளை உடனடியாகத் தொடங்கிடுமாறும் போட்டிகளுக்கான தலைமையாசிரிய பொறுப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இத்துடன் போட்டிகளுக்கான மதிப்பெண் பட்டியலும் முடிவுகள் வெளியிடத் தேவையான பட்டியலும் இடம் பெற்றுள்ளன. போட்டிகள் நடத்திய பின் தேர்வு செய்த மாணவ மாணவிகளின் பட்டியல் முடிவுகளை (28.10.2022) அன்று மாலைக்குள் **9944141099** என்ற எண்ணுக்கு (வாட்சப்பில்) அனுப்பிவிட்டு **29.10.2022** அன்று காந்திநகர் அனைவருக்கும் கல்விதிட்ட அரங்கில் சேர்க்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

for முதன்மைக்கல்வி அலுவலர்

வேலூர் மாவட்டம்.

19/10/2022